**திருவண்ணாமலை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்**

பிறப்பிப்பவர்: திரு.ச.அருள்செல்வம், எம்.எஸ்.சி., எம்.எட்., எம்.பில்.,

ந.க.எண். 7157/அ1/2021, நாள். .11.2021

**பொருள்** பள்ளிக் கல்வித்துறை - பொதுப்பணிகள் - கருணை அடிப்படையில் நியமனம் - பணிக்காலத்தில் காலமான அரசு ஊழியர் திரு.கே.குமாரராஜ என்பவரின் வாரிசுதாரர் கு.ராமச்சந்திரன் இளநிலை உதவியாளர் என்பவரின் பணியினை வரன்முறை செய்து ஆணை வழங்குதல் - தொடர்பாக.

**பார்வை** 01.செய்யாறு, மாவட்டக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.2053/அ1/2017, நாள்.05.06.2017

02.அரசாணை (நிலை) எண்.48/ தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை, நாள்.26.02.2021

03.தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், ந.க.எண்.21925/ஜே/இ4/2021, நாள்.09.04.2021

04.செய்யாறு, மாவட்டக் கல்வி அலுவலரின் ந.க.எண்.874/அ1/2014 நாள்.21.08.2021

----

திருவண்ணாமலை மாவட்டம், தெள்ளார், அரசு மேல்நிலைப்பள்ளியில் கைத்தொழில் ஆசிரியராகப் பணிபுரிந்து பணிக்காலத்தில் 20.12.2006 அன்று காலமான திரு.கே.குமாரராஜ என்பவரின் வாரிசுதாரர் கு.ராமச்சந்திரன் என்பவருக்கு பார்வை 1-ல் காணும் செயல்முறைகளின்படி கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக தற்காலிமாக நியமனம் செய்யப்பட்டு வந்தவாசி, வட்டாரக் கல்வி அலுவலகத்தில் 06.06.2017 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார்.

பார்வை 2-ல் காணும் அரசாணை பத்தி 5.1 மற்றும் 5.2ல் கீழ்க்காணுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(5.1) 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணையடிப்படையில் பணியமர்த்தப்பட்டு எந்தவித விதித்தளர்வு (Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு (Exemption of Government Orders) தேவைப்படாத அனைத்து பணியாளர்களின் பணி நியமனமும் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு வரன்முறைப்படுத்தப்படுகிறது.

(5.2) மேலே பத்தி 5.1ல் உள்ள ஆணையினை செயல்படுத்த, சம்பந்தப்பட்ட நியமன அலுவலர்களின் (Appointing authority) ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர்கள் (one level higher than the appointing authority), அவரவர் கட்டுபாட்டின் கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசுப் பணியாளரின் பணியினை வரன்முறைசெய்திட, உரிய செயல்முறை ஆணை (Proceedings)

Scanned by TapScanner

வெளியிட்டு, தொடர்புடைய அரசுப் பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும் என அறிவுறுத்தப்படுகின்றனர்.

எனவே, தனியருக்கு எந்தவித விதித்தளர்வு மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு ஏதும் தேவைப்படாத நிலையில் பார்வை 2-ல் காணும் அரசாணையின்படியும், பார்வை 4-ல் காணும் கடிதத்தில் நியமன அலுவலரின் பரிந்துரையின் பேரில் கு.ராமச்சந்திரன் என்பவர் கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப்பணியில் இளநிலை உதவியாளராக நியமனம் பெற்ற நாளான 06.06.2017 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்தப்படுகிறது.

மேற்படி கு.ராமச்சந்திரன் பணியேற்ற நாள் முதல் மூன்றாண்டு காலத் தொடர் பணியில் ஈராண்டு காலத்தில் தகுதிகாண் பருவத்தை திருப்திகரமாக முடிக்க வேண்டுமெனவும் அறிவுறுத்தப்படுகிறார். தகுதிகாண் பருவகாலத்தில் மேற்படி தனியர் தமிழ்நாடு அமைச்சுப்பணி விதிகளில் குறிப்பிட்ட தேர்வுகள் / பயிற்சிகளில் தேர்வு பெற வேண்டுமென்றும் ஆணையிடப்படுகிறது.

இணைப்பு- அசல் பணிப்பதிவேடு.

முதன்மைக் கல்வி அலுவலர்,
திருவண்ணாமலை.

15/11/21

**பெறுநர்**

கு.ராமச்சந்திரன், இளநிலை உதவியாளர்,
வட்டாரக் கல்வி அலுவலகம், வந்தவாசி (உரிய வழியாக)

**நகல்**

01. மாவட்டக் கல்வி அலுவலர், செய்யாறு.
02. வட்டாரக் கல்வி அலுவலகம், வந்தவாசி

**நகல்**

சென்னை-06, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.

ந.க.எண்: 1110/அ1/2021 நாள்: 04-12-2021

நகல் தகவலுக்காகவும், தக்க நடவடிக்கைக்காகவும் சம்மந்தப்பட்ட பணியாளருக்கு அனுப்பலாகிறது.

4/12/2021
வட்டாரக் கல்வி அலுவலர்
வந்தவாசி-604 408
4/12/2021

பெறுநர்
சம்மந்தப்பட்ட பணியாளர்